**பிற கட்டணங்கள்( தேவைப்படும்போது மாணவர்கள் விண்ணப்பிக்கவும்)**

| | |
|---|---|
| பதிலிச்சான்றிதழ், உண்மைத்தன்மைச்சான்றிதழ், கடைசித்தேர்வு சான்றிதழ், சான்றிதழில் பெயர் திருத்தம் (ஒவ்வொன்றிற்கும்) | ரூ.1000 |
| பட்டப்பேற்று சான்றிதழ் (தொலைநிலைக்கல்வி-தட்கல்முறை) | ரூ.1500 |
| மறுமதிப்பீட்டுக்கட்டணம் / இணைச்சான்று/ஆய்வேடு சமர்ப்பித்தலுக்கானச் சான்று/ பிற சான்றிதழ்கள் | ரூ.500 |
| தமிழ் வழிச் சான்று கட்டணம் | ரூ.100 |

தேர்வுக்கட்டணத்தை பேங்க் ஆப் இந்தியா வங்கிக் கிளை கணக்கு எண்ணில் (A/C.No.814510110001726) உரிய மஞ்சள் நிற செலுத்துச்சீட்டு வழியாகவோ அல்லது www.tamiluniversitydde.in மூலம் SBI Online Payment வழியாகவோ செலுத்தலாம். தேர்வுக்கட்டணம் செலுத்தியதற்கான இரசீதினை விண்ணப்பத்துடன் கண்டிப்பாக இணைக்கவேண்டும் வரைவோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. உரிய தேர்வு கட்டணமின்றி பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது. ஒரு முறை செலுத்திய தேர்வு கட்டணம் எந்தவொரு நிலையிலும் மீள வழங்கவோ அடுத்துவரும் தேர்வுக்கு ஈடுசெய்யவோ இயலாது.

ஒரு கல்வி ஆண்டிற்கான தேர்விற்கு முதன்முதலில் விண்ணப்பிக்கும்பொழுது,அவ்வாண்டின் அனைத்துப் பாடங்களுக்கும் உரிய கட்டணத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

தேர்வு விண்ணப்பத்தில் தங்கள் பெயரை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தெளிவாகக் குறிப்பிட்டு அதற்கு சான்றாக விண்ணப்பப் படிவத்துடன் +2 மதிப்பெண் / மாற்றுச் சான்றிதழின் நகல் இணைத்தனுப்ப வேண்டும்.

மாற்றுத்திறனாளி மாணவ / மாணவிகள் எவருக்கேனும் தேர்வு எழுதுவதற்குத் தனியாள் (Scriber) தேவைப்படின் முன்கூட்டியே தனியாளின் (Scriber) தன்விவரக்குறிப்பு மற்றும் புகைப்படத்துடன் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலகத்துக்கு விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும். இவர்களின் கல்வித்தகுதி +2 படிப்பிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

தேர்வு முடிவுகள் வெளியான 30 நாட்களுக்குள் மறு மதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கலாம். தேர்வு முடிவுகளை www.tamiluniversity.ac.in என்ற இணையத்திலும் பார்வையிடலாம்.